Enrich, XII(II): 1 - 8, Jan – June, 2021

# உறவுச் சிக்கல்களும் கவிஞரின் தீர்வுகளும்

சா.ஆனந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

பூமியில் வாழ்கின்ற உயிரினங்களின் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் மற்றும் பாலுணர்வுத் தேவைகள் ஆகியவற்றில் அடங்கியுள்ளன. மனித இனத்தின் தேவைகள் அளவிட முடியாதவை. இந்த தனித்தன்மையின் தேவைகள் புரியாத காரணத்தினால் மனித இனம் வாழ்க்கையில் பல விதமான சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. மனிதன் எப்போதும் சமுதாய வாழ்வில் ஊடுருவி நிலவி வருகின்ற பழக்கத்திற்கும் அறிவுப்பூர்வமான விளக்கத்திற்கும் இடையே போராடி வருகிறான். மனிதனால் பழக்கங்களை மாற்ற முடிவதில்லை. அவனால் பெற்ற விளக்கங்களை மறக்கவும் முடிவதில்லை. சிக்கல்களை எளிதில் தீர்க்க இயல்வதில்லை மனித இன உறவுகளின் சிக்கல்களைக் களைவதற்கு அவ்வப்போது பலவிதமான முயற்சிகளும் எளிமையான முறைகளும் முயற்சிகளும் முன்னோர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை நிரந்தர பலனை அளிக்கவில்லை. சிக்கல்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இதனால் மனிதனுக்கு வாழ்க்கையின் மீதுள்ள ஆர்வம் குறைந்தும் நம்பிக்கையற்றும் காணப்படுகிறது.

மனித உறவுச் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணங்கள் இயற்கையை அறியாமை. மனித உடலும் மனமும் சார்ந்த செயல்களையும் மதிப்புகளையும் அறியாமை, தேவையற்ற பொருள்கள் மீது ஆசை, சடங்கு முறைகளைப் பின்பற்றுதல், பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசியல் குழப்பங்கள், இலஞ்ச ஊழல், சமயத்தொடர்பான சகிப்புத்தன்மையின்மை, பெண்மையின் மேன்மையைப் புறக்கணித்தல், போர்க்கருவி உற்பத்தி, போர்களின் பெருக்கம், மனித வளத்தின் மேன்மை புறக்கணித்தல் ஆகியவை ஆகும். இக்கட்டுரை கவிஞர் பா.விஜயின் கவிதைகளில் மனித உறவுச்சிக்கல்களையும் ஆசிரியரின் தீர்வுகளையும் ஆராய்வதாக அமைகிறது.

**இயற்கைச் சிக்கல்கள்**

மனிதரின் வாழ்க்கை செம்மையாக இருக்க வேண்டுமென்றால், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

“நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும், ஒன்று நம் உள்ளம் மற்றொன்று உடம்பு. மூன்றாவது சுற்றுப்புறம், நாம் விரும்பினால் உள்ளத்தை முழுவதும் நன்றாக வைத்திருக்க முடியும். ஆனால் எல்லோரும் சேர்ந்து விரும்பினால் தான் சுற்றுப்புறத்தை நன்றாக அமைக்க முடியும்” டாக்டர் மு.வரதராசனார். (புதுக்கவிதைகளில் பன்முகப்பார்வை) (ப.28) க.இராமச்சந்திரன்.

இக்காலங்களில், மனிதன் முன்னெப்போதையும் விட உலகத்தை முழுக்க முழுக்கத் தன்வசப்படுத்த நினைக்கின்றான். இயற்கைப் பெருந்தொகுதியில் மனிதன் அற்பமானவன். இயற்கை உயிரினங்களின் பங்களிப்பு முதன்மையானவை, அவற்றை மனிதன் சுயநலத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. இதனால் மனிதவாழ்வும் இயற்கையுடன் சேர்ந்து அழியும். இயற்கைக்கு எதிர் நிலையில் செயல்படாது அதனோடு இணைந்து வாழ்தலும் உயிரினங்களுக்குச் சேவை

செய்து வாழ்தலுமே பேரின்பம். அதுவே மனித வாழ்விற்கான அர்த்தத்தை வழங்கும். இயற்கையை முதன்மைப்படுத்திய கவிதைகள் அனைத்தும் ஒன்றையொன்றும் உணர்ந்தும் உயிரித்தும் பாடி இயற்கையுடன் இணைந்த உயிர்ச்சமநிலையை உணர்த்துகின்றன. இதனையே

''நிலத்திலும் நீரிலும் வாழும் பெரிதும் பிரமாண்டமான ஜீவராசிகளில் தாவரங்களின் உயிர்வாழ்க்கை இந்தப்பூமி சமநிலையுடன் இருக்க எத்தனை அவசியம் என்பது'' என்று அட்டன்பரோ கூறுவதாக ஷங்கர் ராமசுப்ரமணியன் குறிப்பிடுகிறார். (இந்து தமிழ் திசை 16.10.2020 சுறாக்கள் எழுப்பும் துக்கப்பாடல்கள் நாளிதழ்)

மனிதனின் நுகர்வுத் தன்மையை ஊக்குவிக்கும் அவாவினால் இயற்கையும் மனித வாழ்வும் பெருஞ் சீர்கேட்டினை அடைந்துள்ளன. மனிதன் இந்த துய்த்தலை விரும்பினால் பேரழிவே விளையும். உண்மையில் இது மனித அறத்திற்கு உயிர் அறத்திற்கு ஒவ்வாதது. இந்த ஆராத இயல்புடைய அவாவினை நீக்குவது எளிமையானதன்று. மனிதனுக்கு இயற்கையின் ஒரு பகுதியாக இயற்கையின் அங்கமாக மாறும் நிலை கிட்ட வேண்டும். இயற்கை எப்போதும் வெல்ல முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

இன்றைய மனித சமூகம் இயற்கையின் மீது போர் தொடுத்துள்ளது நவீன அறிவியல் தொழில்நுட்பங்களும உலகமயமாதல் பின்புலமும் நுகர்வு வெறியும் இப்போரினைத் தீவிரமாகச் செயல்படுத்துகின்றன. வனங்களும் மலைகளும் கடல்களும், வயல்வெளிகளும், உயிரினங்களின் வாழ்தலும் கிராமிய பழங்குடி வாழ்முறையும் இன்னபிற இயற்கையுடன் இணைந்த பண்பாட்டுத் தனித்தன்மைகளும் மனிதரல்லாத புற உலகாகும். இயற்கையை மனிதன் தன் தேவைக்காகப் பயன் படுத்திக்கொள்கிறான். மனிதனை மையப்படுத்தும் அமைப்பிலிருந்து மாறி இயற்கையை மையப்படுத்த வேண்டும். மனிதன் இயற்கையின் ஒரு பகுதி அதே போல மற்ற உயிர்த் தொகுதிகளும் இயற்கையின் அமைப்பில் முதன்மையானவை. இயற்கைக்கும் இலக்கியத்திற்கும் அமைப்பில் முதன்மையானவை. இயற்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவைக் கற்றல் இயற்கையை மையப்படுத்திய படைப்புகளை முதன்மைப்படுத்தல் இலக்கியங்களால் வெளியிடப்படும். இயற்கை சார்ந்த தன்மைகளை முன்வைத்தல் என்பதோடு மட்டுமின்றி இயற்கையின் பேராற்றலை முதன்மைப்படுத்துதல் போன்றவை முன்னிறுத்தப்படவேண்டும். மனிதமையச் செயல்பாடுகளால் ஏற்பட்ட புற உலக இயற்கையழிவுகளை முன் வைத்து மனிதன் முதன்மையல்ல - இயற்கையே மையமானது எனும் கருத்தியலை உருவாக்க, இயற்கை, உயிரினங்களின் விடுதலை கோரும் அதே நேரத்தில் அது மனிதனின் விடுதலைக்குமான பாதையாகவும் அமைகிறது.

கவிஞர் பா.விஜய் மனித சமுகம் ''இவர்கள் பௌர்ணமியின் பொற்கரங்களை அமாவாசை இருட்டில் தேடி அலைந்து கொண்டிருப்பவர்கள், இன்றைக்குள் புகுந்துவிட்ட இன்பத்தில் நேற்றைக்கு தீ வைக்க நினைக்கிறார்கள்'' என்கிறார் (அடுத்த அக்னிபிரவேசம் ப10) இந்த உலகை வாழத்தகுதியற்றதாக மாற்றும் வகையில் அமைந்துள்ளன இன்றைய மனிதர்களின் நடவடிக்கைகள் என்பதை,

''கடந்த காலத்திற்கு ஒரு

கட்டாயக் கல்லறை கட்டிவிட்டு
எதிர் காலத்திற்குள்
எட்டு வைக்கிறோம்
ஒரு கையில்
அடுத்த நூற்றாண்டுகளை
வளைத்துப் போடுவதற்காக
வலை பின்னிக் கொண்டு
விஞ்ஞானத்திற்குள்
விழுந்து குவிந்து கிடக்கும்
பொற்காசுகளைப் பொறுக்கி
பழமைப் பானைக்குள்
பத்திரப்படுத்த நினைக்கிறது
கறைகள் மட்டும் இன்னமும்
கழுவப்பட்டபாடில்ல
காரணம் அது
உதயத்தில் படிந்த அழுக்கல்ல
இதயத்தில் படிந்த அழுக்கு
“சுதாரிப்போம், இல்லையேல்
அடுத்த புத்தாண்டிற்கு பூமி
சுழலாமல் மௌனம்
அனுஷ்டித்து விடலாம்” (அடுத்த அக்னிபிரவேசம் ப.11)

என்பதன் மூலம் இயற்கையைக் காக்க வேண்டியதன் அவசியத்தை அறிய முடிகிறது. இயற்கை, மனித உறவுச் சிக்கலை அறிய மனிதர்கள் இயற்கையின் எல்லையற்ற விந்தையை துறவு நிலையில் அதனுடன் ஒன்றி வாழ்ந்து அதனை உணர வேண்டும் என்கிறார். வித்தக கவிஞர் பா.விஜய்.

**சுற்றுப்புறச் சூழல் சிக்கல்**

அறிவியலின் வானளாவிய வளர்ச்சி,

“கருவில் இருக்கிறது, ஒளி வேக விமானத்தில்
விசா வாங்கும் தலைமுறை
கையடக்கப் பதிப்பு கணிப்பொறி இயக்க
அறிவு சூல் கொண்டுள்ளது அடுத்த தலைமுறை”

(ஒரு கூடை நிலா ப.84)

என்கிறார் கவிஞர் பா.விஜய், மக்கள் தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள தேவைகளின் காரணமாக மனித சமுதாயம் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்க நேர்கிறது. இயற்கை வளங்களை மனிதன் அதிக அளவு சுரண்டுவதாலும், இயற்கையின் மீது மனிதன் அத்துமீறி தன்னுடைய ஆளுமையைச் செலுத்துவதாலும், இயற்கை வளங்கள் அழிந்தும், சுற்றுச்சூழல் மாசுபட்டும் பெரும்பாதிப்புக்குள்ளாகி பெரும் சமூகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. மனிதன்

வாழுகின்ற சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள சிதைவுகள் சமூகச்சிக்கல்களை உருவாக்கியுள்ளன. இது எதிர்காலச் சமுதாயத்தினரின் வாழ்க்கையைக் கூட கேள்விக் குறியாக்கியுள்ளது என்பதனை கவிஞர் பா.விஜய்,

''காற்று கூட காலுறை அணியாது நடந்தால்
நோய் வாய்ப்படும் இனி
உலகமும்
நரம்புகளும் மாசடைந்து வருகிறது
பாதுகாப்பு என்பது
தேசங்களுக்கு மட்டுமல்ல
தேகங்களுக்கும் தேவை என்றாகிவிட்டது'' (காகித மரங்கள் ப.46)

என இயந்திரங்களின் புகை, காற்றை அசுத்தப் படுத்துகிறது என காதலின் நினைவுச் சின்னமான தாஜ்மகாலுக்கு ஏற்பட்ட களங்கத்தைச் சுட்டுகிறார் கவிஞர்.

''களங்கப்படா ஒரு
காதலின் நினைவுச் சின்னம்
களங்கப்பட்டு வருகிறது
கரியமில வாயுவால்!
காப்பாற்றுவோம்
காதலை முடியாவிட்டாலும்
காதலின் சின்னத்தையாவது! (காகித மரங்கள் ப.51)

ஆலைகளின் கழிவுகளை ஆற்றுக்குள் கலந்து பூமியை மாசுபடுத்துகிறான் மனிதன்.

''ஆலைக் கழிவை
ஆற்றுக்குள் கலந்து
மறைப்பவன் அசுரன்'' (காகித மரங்கள் ப.45)

இத்தகைய மனிதர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் அந்நாளே தீபாவளி என்கிறார் கவிஞர் பா.விஜய்

''சாயப்பட்டறைகள் மொட்டையடித்தது போக
மீதி இருக்கும் பூமியாவது பூச்சூடிக் கொள்ளட்டும்''
(ஒரு கூடை நிலா ப.84)

என்ற ஆதங்கம் கவிஞருக்கு ஏற்படுகிறது. அணு உலைகளின் விளைவுகளால் அடுத்த நூற்றாண்டில் மனிதன் அபூர்வமானது.

''உலகின் கருப்பையில் அணு ஆயுதச் சோதனைகள்
வலியால் துடிக்கும் தென்துருவ பாறைகள்''
(ஒரு கூடை நில ப.85)

சுற்றுச்சூழல் சீர்கேட்டால், பருவநில மாறுபட்டால், புவிவெப்பச் சூடேற்றத்தால், துருவப் பிரதேங்களில் பனிப்படலங்களின் அழிவால் பனிமலைச் சிகரங்கள் உருகுவதையும் சுற்றுச்சூழல் சீரழிவின் விளைவையும் உணர முடிகிறது. மனிதனின் மனங்களில் இற்கையைப் பற்றிய உணர்வு, புரிதல், அணுக்கம், விருப்பம், ஆர்வம், அன்பு ஆகிய எண்ணங்கள் தளிர்விட வேண்டும் என்கிறார் கவிஞர் பா.விஜய்.

இதனையே கவிஞர் நா.தனராசன்

“இப்படியே போனால்
எதிர்காலத்தில்
உலகம் ஒளி விடாது
இருட்டறைக்குள் தான்
இளைப்பாறும்!” (அந்த கிராமத்து மனிதர் ப.15,16)

என வேதனையோடு அறிவுறுத்துகிறார்.

**பொருளாதார ஏற்றத்தாழ்வு**

விலங்கினங்களுக்கு பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லை. இயற்கையின் கருணை உயிர்களின் தேவைகளை இருப்பு வைத்து வாழ வைக்கிறது. மனித வாழ்வில் மட்டுமே பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சிக்கல் தோன்றி தொடர்ந்து இருந்து கொண்டும், பெருகிக் கொண்டும் இருக்கிறது. மனித சமுதாயத்தின் நிர்வாகத்துறையில் ஒழுக்கப் பழக்கங்களிலும் உள்ள குறைபாடுகளே அதற்குக் காரணம்.

இரு வேறு துருவங்களாக ஏழைகளும் பணக்காரர்களும் இருக்கிறார்கள். பாடுபட்டு உழைத்தாலும் பட்டபாட்டிற்குப் பலன் காணாமல் இருப்பவர்களை, முக்கிய கனவுகளோடு முச்சந்தியில் நிற்பவர்களைக் கண்டு கவிஞர் பா.விஜய் மனம் நொந்து,

“ஓட்டுப் பட்டியலில் மட்டும்
உயர்திணையாகும் நாங்கள்
ஆண்டாண்டு காலமாய்
அஃறிணை கொட்டடியில்
அடைக்கப்பட்டிருக்கிறோம்
இந்த தேசகுடிமகன்களை
தெருவில் நிற்க வைத்து விட்ட
உங்களுக்கு
தேசிய கீதமென்ற ஒன்று தேவைதானா
இன்னமும் இடுப்புத்துணிக்கே
ஓயாத போராட்டமிங்கே
நீங்கள் சமதர்மம் பேசுவது சரிதானா”

(அடுத்த அக்னிப் பிரவேசம் ப.74,75)

பணபலம் மிக்க அரசியல்வாதிகள் ஏழை மக்களை அஃறிணையாகக் கருதி அடிமைப்படுத்துகின்றனர். ஏழைகள் ஓட்டுப் போடும் போது மட்டுமே உயர்திணையாகக் கருதப்படுவதை எண்ணி மனம் கொதிக்கிறார் கவிஞர் பா.விஜய். இந்நிலை நீடித்தால்

“உழைத்துப் பிழைப்பவன் ஆண்டி
உழைப்பைக் கறப்பவன் ஆண்டான்
எங்களின் சதை மண்டலங்களில் நரம்புகளின் ஒலி
இந்த நூற்றாண்டின் கதவை நொறுக்கும்
எங்களின் உயிர்க் கூட்டிலிருந்து
வெடித்துச் சிதறும் வேட்டுச்சத்தம்

பிணைக்கப்பட்ட விலங்குகளைப் பிளக்கும்
பாவப்படுத்தப்பட்ட பாழாய் போன
வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கின்ற உழைப்பாளிகளின்
வளைந்த முதுகு நிமிரும் ஊனமாய் புலம்புகின்ற
ஒரு வர்க்கத்தின் கரங்கள்
உணர்ச்சிப் பிழம்பாய் சிவக்கும்"

(அடுத்த அக்னிப் பிரவேசம் ப.76,77)

உழைப்பாளிகளின் வளைந்த முதுகு நிமிரும் காலம் வரும் என எச்சரிக்கை செய்கிறார் கவிஞர் பா.விஜய்.

**பொருளாதாரப் பற்று**

இன்றைய மனிதன் வாழ்க்கையை வியாபாரம் ஆக்கிவிட்டான். மரத்தைக் கண்ட ஒருவன் எத்தனை கிலோ இருக்குமென்று மனக்கணக்குப் போட்டான். மற்றொருவன் மனைகளுக்கு கதவு செய்யலாமென்று கணக்கிட்டான். ஒருத்தி பழங்களை சந்தைக்கு எடுத்து போவதென்று யோசித்தாள். அரசியல்வாதி எங்கே கட்சிக் கொடிகளைக் கட்டுவது என்று அண்ணாந்தார் சாமியார் வந்தார். எந்தக் கிளையில் உண்டியல் தொங்க விட்டு உட்காரலாம் என்று கைபிசைந்தார். கவிஞர், ஓவியன் இருவரும் கவிதை, ஓவியத்தைப் பணமாக்குவதற்குப் பத்திரிக்கை அலுவலகம் சென்றனர் என்று மனிதன் எதையும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் தரிசிக்கத் தயாராகிவிட்டான் என்கிறார் கவிஞர் பா.விஜய்.

"மரத்தின் மூலம் இளந்தென்றல் வரும்
அதில் பட்சிக் கூட்டங்கள் குடியிருக்கும்
மழையோடும் புயலோடும் போராடி வாழும்
மரம் சிறந்த போராளி" (வள்ளுவர் தோட்டம் ப.305.309)

**காசாகும் கல்வி**

கல்வி என்பதன் வேர்ச்சொல் 'கல்' என்பதாகும். 'கல்லுதல்' என்பது 'தோண்டுதல்' 'துருவுதல்' என்று பொருள்படுகிறது. கல்வி மனிதனுக்கு சமுதாயத்தினையும் அச்சமுதாயத்தில் மனித வாழ்க்கை நிலையினையும் தோண்டித் துருவி அறிந்து கொள்ளும் அறிவினைத் தருவதாக அமைதல் வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி வாய்ப்பு என்பது அடிப்படையான ஒன்று. இன்றைய கல்வி கன்றுக் குட்டியிடம் காம்பு தேடும் கூத்தாய் நடக்கிறது. விவசாயமென்று விறகுகளை விதைக்கும் கேட்பாரற்ற கேலிகள் நடக்கிறது. மனிதர்கள் கல்வி நிறுவனங்களில் ஆட்டு மந்தைகள் மாதிரி சம்பாதித்ததை தொலைப்பதற்கும் தொலைத்ததை வெளியே போய் சம்பாதிப்பதற்கும் கண்களை விற்று கனவுகளை வாங்குவதற்கும் வேர்களை வெட்டி கிளைகளைத் தாங்கவும் காத்துக்கிடக்கின்றனர் பெற்றோர் - பிள்ளைகள் என்கிறார். பிறக்கப் போகும் சிசுவுக்கு ஆரம்பப்பள்ளி விண்ணப்பம் முதல் மருத்தவம் - பொறியியல் - கணினி எனக் கூறு போட்டுக் கூவிக் கொண்டிருக்கின்றனர். கல்வி நிறுவனங்கள்

"நல்ல கரன்சி மகசூல்
ஆறுகாலமும் நடக்கிறது
அஷ்டலட்சுமி அறுவடை ….."

(கடவுள் வருகிறான் ஜாக்கிரதை ப.5)

நடைபெறுகின்றன. கல்வியை சந்தையாக்கி மாணவனைக் கந்தையாக்கும் கல்வி நிறுவனங்கள் என்கிறார் பா.விஜய். மனிதனுக்கு அளிக்கப்படும் கல்வி அறிவு சார்ந்த வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு அவன் வாழுகின்ற சமுதாயத்தைச் சார்ந்த எதனையும், பண்போடு அணுகி, ஆராய்ந்து, அச்சமுதாயத்தின் அதற்குரிய உறவியல்புகளைக் கணித்து அறிந்து கொள்வதாக இருத்தல் வேண்டும் என்கிறார் கவிஞர் பா.விஜய்.

"போதாக்குறைக்கு இன்றைய
போதி மரங்கள் கூட
சாயங்காலங்களிலும் சம்பாதிக்கத் துவங்கிவிட்டது
ஆனால் என்னவோ
அது ஆக்கித் தருவது
புத்தர்களை அல்ல
பித்தர்களைத்தான்" (அடுத்த அக்னி பிரவேசம் ப.93)

அடக்கம், அருள், ஈகை, பொறுமை, அறம், உழைப்பு, இன்சொல், நட்பு, இரக்கம், நடுநிலை உடையவனை மனித குலத்திற்கு உருவாக்கித் தருவதே கல்வி. இன்றைய கல்வி நிலையங்களோ பித்தர்களைத்தான் உருவாக்கித் தருகின்றன என்கிறார் கவிஞர். மனிதர்களே!

"காசாக்கும் கல்வியை ஒழியுங்கள்
ஓ மக்களே!
புத்தகப் புழுக்களே
உலகத்தைப் படியுங்கள்
உண்மையைப் படியுங்கள்" (கடவுள் வருகிறான் ஜாக்கிரதை ப.8)

கற்கால மனிதனுக்கு மருந்தாக இருந்த கல்வி தற்கால மனிதனுக்கு வியாதியாகிவிட்டது என்று உணர்த்துகிறார் கவிஞர். கல்வி நிலையங்கள் உண்மையை, உலகத்தை பயிற்றுவிப்பவைகளாக மாற வேண்டும் என்ற கவிஞர் பா.விஜயின் எண்ணத்தை உணர முடிகிறது. காசாக்கும் கல்வியை ஒழித்தல் என்பது மக்களின் இனவேற்றுமையை நீக்கி மனித உறவுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழி வகுக்கும் என்பது புலனாகிறது.

**முடிவுரை**

"உறவுச்சிக்கல்களும் ஆசிரியரின் தீர்வுகளும்" என்ற இக்கட்டுரையில் மனித உறவுச் சிக்கலுக்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. தீர்வுகள் கூறப்பட்டுள்ளன. மனிதன் இயற்கை மீது தொடுக்கின்ற போர்களினால் ஏற்படுகின்ற சிக்கல்களும், அதனால் ஏற்படுகின்ற சுற்றுப்புறச்சூழல்களின் பாதிப்புகளும் அவற்றிற்கான கவிஞரின் தீர்வுகளும் விளக்கப்பட்டுள்ளன. சிக்கல்களை மனிதநேயம் கொண்டு தீர்க்கின்ற வழிமுறைகளையும் தெளிவுறுத்துகிறார் கவிஞர்.

மனிதன் இயற்கைத் தத்துவத்தையும் அதற்கு ஒத்துவாழுகின்ற விஞ்ஞானத்தையும் அறியாமையே பொருளாதார ஏற்றத்தாழ்வாக உருவெடுத்து இருக்கிறது. மனிதர்கள் ஒவ்வொருவரும் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம், மனிதநேயம் ஆகிய பண்புகளைப் பெற்றால் மட்டுமே பொருளாதார சமத்துவம் ஏற்படும் என்பது கவிஞரின் சிந்தனை. மனிதன் பேராசை, சுயநலம், உடைமைப் பற்று ஆகிய குறுகிய நோக்குகளை

விடுத்து, பரந்த மனப்பான்மையுடன் பொருளாதார நுகர்வு அவாவை விடுத்தால் மனித வாழ்வில் உண்மை வசந்தங்கள் கூடி மனித உறவுகள் செம்மையாகும் என கவிஞர் பா.விஜய் உணர்த்துகிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. மு.வரதராசனார், புதுக்கவிதைகள் பன்முகப்பார்வை (ப.28)
2. ஷங்கர் ராமசுப்ரமணியன், இந்து தமிழ் திசை 16.10.2020 சுறாக்கள் எழுப்பும் துக்கப்பாடல்கள் நாளிதழ்).
3. நா.தனராசன், அந்த கிராமத்து மனிதர் (ப.15,16)